# உபதேசம்

ஹரி ஸ்ரீனிவாசன் கவிதைகள்

நக்கீரன் இளம்பூரணன் திருவள்ளுவன்
ஸௌஸ்ருதன் அத்ரி பிருகு ஆங்கீரஸன் விஸ்வா
மித்ரன் வசிஷ்டாதி முனிவர்போல்
தேர்வீதி நெற்றியும் திகழும் சந்தனப் பொட்டும்
பார் அளக்கும் கண்ணும் வெளுப்போடும் புருவமும்
நீள் முகமும்
காலக் கணக்கதை
கேள்விக்குறியான நெடு மூக்கும்
அகண்ட கங்கையில் ஆறு கலப்பதுவாய்
அலையோடும் தாடி மேல் விழு மீசை அருவியும்
தில்லை நடராசன் போல் திறந்துவிட்ட மார்பும்
புதர் மீசைக்குள்ளிருந்து
புர்க்காப் போட்டு நெஞ்சை
அதிர்விக்கும் பீவி போல்
அழகாடும் உதடுகளும்
தன்னை
மறந்துவிடச் செய்யும் கைகாலும் குறடுமாக
வந்தார் அவர்
சாமியே சரணம் என்றேன்
வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்...
பழஞ்சோறு ஒரு பிடி
இருந்தால் போதும்
பழங்கந்தை ஒரு முழம் இருந்தால்
கொடும் என்றார்
அவர்

---

**Dr.Kamil Veith Zvlebil (1927-2009) a Czech scholar has done extensive research in Tamil.. In his book,**

***" The smile of Muruga', he says " i think the 'puthukkavithai' movement, the greatest achievement of modern Tamil Poetry so far the names of which I would like to specially mention in connection are those of N.Pichamurti, C.Mani, S.Ramaswamy, D.Sivaramu,Vallikkannan, Hari Sreenivasan, Shanmuga Subbiah, S.Vaitheeswaran,T.S.Venugopalan are truly out standing".***